**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண்.102/2021**

2025–ம் வருடம் நவம்பர் திங்கள் 12–ம் நாளன்று பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.1–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | : பிரபா | **தொழில்** | : |
| **த/பெ.** | : | **வட்டம்** | : |
| **முகவரி** | : | **மதம்** | : |
| **ஜாதி** | : | **வயது** | : |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 14 வது பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். கடந்த 25.09.1984 ஆம் தேதியிட்ட சின்னாறு கவுண்டர் மகன் பிச்சைமுத்து பெயரில் நில உடமை பதிவேடு திட்ட தனி வட்டாட்சியர் வழங்கிய பட்டா புகைப்பட நகல் பி.வா.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 02.10.2015 ஆம் தேதியிட்ட சாமியப்பன் என்பவருக்கு ஏற்பட்ட தனிபட்டா எண்.228 (சர்வே எண்.113/2, 115/3, 115/7) கணிணி பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 02.10.2015 ஆம் தேதிய சாமியப்பன் என்பவருக்கு ஏற்பட்ட தனிபட்டா எண்.228 (சர்வே எண்.113/2) கணிணி பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.3. ஆக குறியீடு

செய்யப்படுகிறது. கடந்த 02.10.2015 ஆம் தேதிய சாமியப்பன் என்பவருக்கு ஏற்பட்ட தனிபட்டா எண்.228 (சர்வே எண்.115/3) கணிணி பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.4. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 20.04.2021 ஆம் தேதிய தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெற்ற ஏமூர் கிராமத்திய சர்வே எண்.113 மற்றும் 115 ஆகியவைகளுக்கு உண்டான U.D.R. நகல் மற்றும் புல வரைபடம் உண்மை நகல் பி.வா.சா.ஆ.5. ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஏமூர் கிராமத்திய சர்வே எண்.113/3 அரசாங்க நிலம் என்பதைக் காட்டுவதற்கு உண்டான பதிவு கணிணி பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.6. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 08.12.1995 ஆம் தேதியிட்ட காளியண்ணகவுண்டர் மகன் சாமியப்பன் என்பவர் குப்புசாமி மகன் செல்வராசு என்பவருக்கு எழுதிக்கொடுத்த குத்தகை பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.7. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 29.05.2017 ஆம் தேதிய மகாலட்சுமி, மைனர் சங்கீதா, மைனர் விஷால், வேம்பாயி ஆகியோர்கள் சாமியப்பனுக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட குத்தகை ரத்து பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.8. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடத 14.09.2020 ஆம் தேதியிட்ட நல்லுசாமி மனைவி சரஸ்வதி மற்றும் நல்லுசாமி மகள் பிரபா என்பவருக்கு ஏற்பட்ட பட்டா எண்.1205 கணிணி பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.9. ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2025.11.12 17:20:51 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.